
விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு *Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி
# VALAMPURI




சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 03 செவ்வாய்க்கிழமை (16.04.2002) தொலைபேசி 3378 ஒலி 118



தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்த்துறைப்பணிமனை நேற்று கொக்குவில் பொற்பதி வீதியில் உள்ள கட்டடத்தில் கோலா கலமாக திறந்து வைக்கப்பட்டது அந் நிகழ்வின் காட்சிகளை படத்தில் காண்கிறீர்கள்

## தாய்லாந்தில் பேச்சு-புலிகள் மீதான தடைநீக்கம் குறித்து

# நோர்வே தூதுக்குழு நேற்று பிரதமர் ரணிலுடன் சந்திப்பு

## 17ம். திகதி பிரபாவுடன் பேச்சு

(களுத்துறையில் இருந்து நமது நிருபர்)

அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே தாய்லாந்தில் இடம்பெறவுள்ள ஆரம்பகட்ட பேச்சுவார்த்தை குறித்தும், தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம் குறித்தும் நேற்று மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் கொழும்புக்கான நோர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

## புலிகளின் பெயரை பயன்படுத்தி விஷமிகள் நிதிவசூல்

### எச்சரிக்கிறார் ஆஞ்சநேயர்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் விடுதலைப்புலிகளின் பெயரை பயன்படுத்தி நிதி சேகரிப்பில் சில விஷமிகள் ஈடுபடுவது அறியப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகளின் அரசியல் பிரமுகர் ஆஞ்சநேயர்(இளம்பரிதி) விசனம் தெரிவித்துள்ளார்

இத்தகைய நிதி சேகரிப்பில் ஈடுபட்டுவரும் விஷமிகளுக்கு குடாநாட்டு மக்கள் எவரும் நிதி வழங்க வேண்டாம் எனவும் இவ்வாறான விஷமிகளை இனம்கண்டு தமக்கு தெரியப்படுத்துமாறு வேண்டுகோள்

(5ம் பக்கம் பார்க்க)

சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கீசன் தலைமையிலான உயர் மட்டக்குழு நேற்று மாலை 5.30 மணிக்கு களுத்துறையில் உள்ள பெந்தோட்ட பீச்ஹோட்டலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது.

நேற்றைய பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்காக நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விசேட விமானம் மூலம் நேற்றுக் காலை கொழும்பு வந்திருந்தார். அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையே நிரந்தர யுத்த நிறுத்தத்திற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு சுமார் 8 வாரங்களிற்குப் பின்பு இடம் பெற்ற இந்த உயர்மட்ட சந்திப்பின்போது தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் குறித்து விரிவாகவும், நுணுக்கமாகவும் இருதரப்பினரும் ஆராய்ந்துள்ளனர். (8ம் பக்கம் பார்க்க)

## யாழ் கண்டி வீதியால்

# தினசரி 1500 பயணிகள் செல்வதற்கே அனுமதி

### பாதுகாப்புத் தலைமையகம் அறிவிப்பு

(யாழ்பாணம்)

ஏ-9 யாழ் கண்டி வீதி ஊடாக பிரயாணம் செய்யும் பயணிகளிற்கு யாழ் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- கடந்த 8ம் திகதி திறக்கப்பட்ட ஏ-9 யாழ் கண்டி வீதியில் முகமாலை வீதி சோதனை சாவடி ஊடாக குடாநாட்டுக்குள் பிரவேசிக்கும் மக்களின் தொகையும், வன்னிப்பகுதிக்கு செல்லும்

(5ம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் தங்கியிருந்த முஸ்லிம்கள் இருபது வாகனத்தில் யாழ் வருகின்றனர்

யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து வவுனியாவில் குடியேறியிருந்த முஸ்லிம் மக்கள் சுமார் 20 வாகனங்களில் யாழ்ப்பாணம் நோக்கிய தமது பயணத்தை நேற்று ஆரம்பித்திருந்தனர் என்று எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் விடுத்த பகிரங்க அழைப்பை அடுத்தே முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணம் நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளனர். இவர்களில் பெரும் பாலானவர்கள் வர்த்தகர்களாவர்.

இதேவேளை நயினாதீவிற்குச் சென்று நாகதீபத்தைத் தரிசிக்க வென பெருந்தொகையான சிங்கள மக்கள் யாழ்ப்பாணம் வரத் தயாராகி வருகின்றனர் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. (வ)

# பிரிட்டிஸ் ஆயுதக்கப்பல் கொழும்புத் துறைமுகத்தில்

(கொழும்பு)

இருநூற்றைம்பது சிப்பந்திகளுடனும், அதிநவீன ஆயுதங்களுடனும் பிரிட்டிஸ் கப்பலொன்று நேற்று முன்தினம் கொழும்புத் துறை முகத்திற்கு வந்துள்ளது.

இந்தக் கப்பல் இன்று புறப்படும் என்றும் இன்னும் சில மாதங்களில் அமெரிக்கா, பிரான்ஸ் நாட்டுக் கப்பல்கள் இங்கு வரும் என்றும் கடற்படைக் கப்டன் ஏ.ஆர். அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் சமாதான முயற்சியை மதிப்பீடு செய்வதுடன் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்காணிப்பது இந்தக் கப்பல்களின் பயண நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

*அன்பு வாசகர்களே!*

நாளைய பொங்கு தமிழ் நிகழ்வை ஒட்டி

**சங்கு நாதம்**

நாளை மறுதினம் வியாழக்கிழமை வெளிவரும் என்பதை அறியத்தருகின்றோம்

ஆ-ர்

# நான்கு அமைச்சர்கள் இன்று யாழ் வருவர்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடா நாட்டுக்கு இன்று நான்கு அமைச்சர்கள் உத்தி யோக பூர்வ விஜயமாக வருகை தரவுள்ளனர்.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சரும் மலையக மக்கள் முன்னணித் தலைவருமான பெ.சந்திரசேகரன், நீர்ப்பசனத்துறை அமைச்சர் காமினி ஜெயவிக்கிரமபெரேரா, மகாவலி நீர்ப்பாசன அமைச்சர் எச்.ஜி.பி.நில்சன், நீர்முகாமைத்துவ அமைச்சர் லக்ஸ்மன் செனவிரத்தன ஆகியோரே இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

அமைச்சர்கள் குடாநாட்டின் நீர்ப்பாசனக் குளங்கள், மற்றும் பாலங்களைப் பார்வையிட்டு அவற்றைப் புனரமைப்பது குறித்து மதிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளனர். இதேவேளை அமைச்சர் சந்திரசேகரன் இன்று தங்கியிருந்து நாளை நடைபெறும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் கலந்து கொள்வார். (இ-43)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## சிறு விளம்பரம்

### கண்டெடுக்கப்பட்டது

தொண்டமனாறு சந்திப் பகுதியில் ஒருதொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர், செயலாளர், கலைவாணி சனசமூக நிலையம் தொண்டமனாறு என்னும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும். (4972)

## வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்டபகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுவருகின்றது.

இந்த வகையில் இன்று காலை 9-11 மணிவரை கோப்பாய் வடக்குஸ்ரீச பாபதி நாவலர் ச.ச.நிலையத்திலும் மு.ப. 10.30-11 30 மணி வரை கோப்பாய்வடக்குச.ச. நிலையத்திலும், நண்பகல் 12-1 மணி வரை அம்மன் கோவிலடி ச.ச. நிலையத்திலும் வைத்து வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (உ)

## இராசி பலன்

16.4.2002

(சித்திரை3, செவ்வாய் சதுர்த்தி பி.இ5.15வரை கார்த்திகை மு.ப 8.47வரை ராகுகாலம்-3.04-4.34 நல்லநேரம்-10-34-12.04

**மேடம்**
வாக்குகலகம், மாதர்நட்பு காரியதாமதம், தனவிரயம்

**இடபம்**
ஜனவசியம், முயற்சிகைகூடும், சயனசுகம், போசனசுகம்

**மிதுனம்**
பிரயாணம், காரியஅலைச்சல், பொருள்விரயம், உறவினர் மனஸ்தாபம்

**கடகம்**
மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, காரியஅனுகூலம் பொருள்சேர்க்கை

**சிங்கம்**
பிறர்உதவி, கடினமுயற்சி நல்லசெய்தி, காரியசித்தி

**கன்னி**
ஆன்றோர்மதிப்பு. புதிய திட்டமிடல், உடல்உபாதை பதற்றநிலை

**துலாம்**
காரியதடங்கல், உறவினர் மனஸ்தாபம், பிரயாணதடங்கல், போசனசுகம்

**விருச்சிகம்**
காரியஅனுகூலம், உடல்நலம், பொருள்சேர்க்கை, அபூர்வசந்திப்பு

**தனுசு**
சத்துருஜெயம், காரியஜெயம், மனமகிழ்ச்சி, தொழில் விருத்தி

**மகரம்**
தாழ்ந்தசுபாவம், வியாபாரவிருத்தி, காரியதாமதம், உடல்நலக்குறைவு

**கும்பம்**
சகோதரர்உதவி, கல்விச் சிறப்பு, முயற்சிதாமதம், பயந்தசுபாவம்

**மீனம்**
வாக்குப்பலிதம், அன்னியர் சந்திப்பு, காரிய நன்மை இனியசம்பவம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது).

வளவன்

# தமிழர் - முஸ்லிம் பிணைப்பு தமிழ்த் தேசியத்திற்கு அவசியம்

## அலுவலகத் திறப்பில் பாப்பா

(யாழ்ப்பாணம்)

தமிழ் முஸ்லிம் சகோதரர்கள் என்றும் தமிழ்தேசியத்தில் இறுகப்பிணைந்திருப்பது காலத்தின் தேவையாகும் என்று புலிகளின் அரசியற்துறை முக்கியபிரமுகரான பாப்பா தெரிவித்தார்.

புலிகளின் அரசியற்துறையின் யாழ்மாவட்ட அலுவலகம் நேற்று பொற்பதி வீதியில் மு.ப11மணியளவில் பெருந்திரளான மக்கள் சமூகமளித்திருக்க கோலாகலமாக திறந்துவைக்கப்பட்டது

அவர் அங்குதொடர்ந்து உரையாற்றும் போது நாம் 7வருடத்திற்குப்பின்பு யாழ்ப்பாணத்தில் காலடியெடுத்து வைத்துள்ளோம் யாழ்ப்பாண மக்கள் நாம்எதிர்பார்த்ததை விட மிகமகிழ்ச்சியோடு எம்மை வரவேற்றார்கள்.

அவர்கள் எமதுவருகையை நீண்டகாலம் ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள் என்பதைப் புரிந்துகொண்டோம்.

யாழ்மண்ணில் பலமாற்றங்களை காண்கின்றோம் ஆனால் மக்களின் உன்னதமான தேசியஉணர்வில் மாற்றம் இல்லை என்பதுபோற்றற்குரியது.

எமதுதமிழ்தேசியக் கொள்கைக்கு பின்னால் எல்லாத் தமிழ்மக்களும் அணிதிரள வேண்டுமென்பதே எமது தலைவரின் விருப்பமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு நாம்கொடுத்த விலை அதிகம் இழப்புக்கள் ஏராளம் ஒவ்வொருவிடுதலை உணர்வுகொண்ட தமிழனும் சந்தித்ததுன்பங்கள்சொல்லில் அடங்காது ஆனால்நாம்விடவில்லை உறுதியுடன்தான் முன்னேறிக்கொண்டிருக்கின்றோம் இதற்குமுழுமுதற் காரணம் எமது அருமைக்களாகும்.

சிக்கலான நெருக்கடியான காலகட்டத்திலெல்லாம் மக்கள் எமக்களித்த ஆதரவை மறக்கமுடியாது அவர்களை நினைக்க எமதுள்ளம் சிலிர்க்கிறது உதாரணமாக சங்கானைப்பகுதியிலே இராணுவம் தன்னை விடுதலைப்புலிகளுக்கு உணவுகொடுத்த குற்றத்திற்காக தேடுகிறது என்பதை அறிந்த வீரத்தமிழ் மகனொருவர் தான்இராணுவத்திடம் பிடிபட்டால் உண்மைகளை சித்திரவதைகாரணமாக சொல்லிவிடக் கூடுமென்பதற்காக பாழடைந்த வீட்டுக்குள் சென்று பொலிடோல் அருந்தி தன்னைத் தானே மாய்த்துக்கொண்டார்.

தொடர்ந்து பேசுகையில் எமது தலைவரின் கருத்துப்படி விடுதலைப்புலிகள் இயக்கம் தனது ஒவ்வொரு அடியையும் நிதானமாகவே எடுத்துவைக்கிறது இனியும் அவ்வாறே நடந்துகொள்ளும் என்றார். (எ-19)

# யாழ். பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு சமாதானத்துக்கான உந்து சக்தி

## இந்துசமயப் பேரவை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் நாளை நடைபெறும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுக்கு குடாநாட்டு மக்களை அணிதிரளுமாறு இந்து சமயப் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து பேரவை நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது ;

தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு ஓர் அரிய சாதனை மைற்கல்லாகவே அமைந்துள்ளது. ஆதலால் இந்நிகழ்விற்கு அனைத்து மக்களும் வேறுபாடுகளை மறந்து இலட்சோபலட்சமென அணிதிரளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்தே தமிழ் மக்களின் உரிமைப்போராட்டமும் தொடங்கிவிட்டதென்றே கூறவேண்டும். தமிழ் மக்களுக்குவழங்கவேண்டியஉரிமைகள்மறுக்கப்பட்டதால்தமிழ்த் தலைவர்கள் சாத்வீக ரீதியாக உரிமைப்போராட்டங்களைத் தொடங்கினர் இப்போராட்டங்களுக்கு உரிய மதிப்பளிக்கத் தவறிய அரசுகள் தமிழ்மக்களை இந்த நாட்டின் இரண்டாம்தரப் பிரஜைகளாகவே கருதிவந்ததுடன் ஈற்றில் தமிழ்மக்களின் உயர்கல்வி உரிமையையும் மறுத்தனர்

1958,1977,1983 ஆண்டுகளில் தமிழ்மக்களின் மீது இனக்கலவரங்கள் தூண்டிவிடப்பட்டு தமிழ்மக்கள் இம்சைப் படுத்தப்பட்டதோடு பலலட்சம் ரூபாபெறுமதியான சொத்துக்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன ஒன்றும் அறியாத அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர் சாத்வீகப் போராட்டத்தை நடத்திய தமிழ்த்தலைவர்கள் கொச்சைப்படுத்தப்பட்டனர் பலதடவைகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்டனர் பலஒப்பந்தங்கள் முறியடிக்கப்பட்டனஇவற்றைக்கண்டு விரக்தியடைந்த தமிழ்மக்கள் வேறு வழியின்றி 1970களில் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டுமானால் தனித்தமிழ் அரசை நிறுவுவதே வழி என வட்டுக்கோட்டை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றினர்.

இதனை நிறைவேற்றுவதற்கு சாத்வீக ரீதியில் நடத்திய போராட்டங்கள் வெற்றியளிக்காத காரணத்தினால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திய போராட்டத்தைத் தொடங்கவேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டனர் இவ்வாயுதப்போராட்டம் எத்தனையோ சோதனைகளின் மத்தியிலும் தியாகங்களின் மத்தியிலும் நடைபெற்று வருவதை அனைவரும் அறிவர் இன்று இறைவன்அருளால் சமாதானம் ஏற்படக் கூடிய அரியசூழல் ஏற்பட்டுள்ளது இதனை இலங்கைஅரசும் ஏனைய பெரும்பான்மை அரசியற் கட்சித் தலைவர்களும் சரியான முறையில் புரிந்துகொண்டு தமிழீழவிடுதலைப் புலிகளுடன் மனம்திறந்து பேசி பன்னெடுங்காலம் தீர்க்கப்படாத தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இத்தீர்வினை எட்டுவதற்கு நடைபெறப்போகும் பொங்கு தமிழ் எழுச்சி சமாதானத்திற்கான மாபெரும் உந்து சக்தியை ஏற்படுத்தித்தரும் அரியசாதனமாகும். வீழ்ந்து கிடக்கும்இனவாதம் மீண்டும் புத்துயிர் பெற்று இந்தநாட்டை துன்பசாரத்தில் ஆழ்த்தாதிருப்பதற்கு இவ்வெழுச்சி நன்கு உதவும் ஆதலால் மக்கள் அனைவரும் இலட்சோபலட்சமென அணிதிரண்டு பரிபூரண ஆதரவு நல்குமாறு மிகுந்தஆராமையுடன் கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

# பொங்குதமிழ் நிகழ்வுக்கு இந்துகுருமார்பூரணஆதரவு

## சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நாளை நடைபெற இருக்கின்ற பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்விற்கு சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் பூரண ஆதரவு தெரிவித்துள்ளது.

இதுகுறித்துநேற்றுஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில், சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தனித் தேசியஇனம் ஆகியவற்றை உள்ளடக்கி நிரந்தர சமாதானம் மலர நாளை நடைபெறவுள்ள இப் பொங்கு தமிழ் நிகழ்வு சீரும் சிறப்புமாக அமைய வாழ்த்துவதோடு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் பரிபூரணஆதரவினையும் ஒத்துழைப்பையும் வழங்குகிறோம்.

இன, மத பேதமின்றி தமிழ் மக்கள் அனைவரும் இப் பொங்குதமிழ் நிகழ்வுக்கு தமது பூரண ஒத்துழைப்பையும் வழங்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் அலுவலகம் அரச அதிபரால் திறப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்டத்திற்கான முதலாவது அரசியல் அலுவலகம் நேற்றைய தினம் அரசாங்க அதிபர் கே. சண்முகநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, இந்து-கிறிஸ்தவ-முஸ்லிம் மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களான கே.என்.சிவாஜிலிங்கம், என். ரவிராஜ் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் பெருமளவு பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஈகச்சுடரை போராளி ஜோனியின் தந்தை தட்சணாமூர்த்தியும், தமிழீழ தேசியக் கொடியை புலிகளின் அரசியல் பிரமுகர் இளம்பரிதியும் ஏற்றினர். (உ.19)

## பிரபாவின் கட்டவுட்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கடற்தொழிலாளர் சமாஜ அலுவலக வாயிலில் தலைவர் பிரபாகரனின் பெரியளவிலான கட்டவுட் வைக்கப்பட்டுள்ளது, (உ-6)

## துடுப்பாட்டம்

யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடாத்தும் 15 வயதின் கீழ்ப்பட்டவர்களுக்கான துடுப்பாட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் புனித பரியோவான் கல்லூரி அணி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளன.

நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பி.சிவபாதம் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (உ-3)

# 47 பேரடங்கிய மற்றுமோர் வர்த்தகர் குழு 29இல் யாழ். வரும்

(கொழும்பு)

யாழ்குடா நாட்டில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பான சாத்தியப்பாடுகளை கண்டறிய 47 பேர் அடங்கிய உள்ளூர் வர்த்தக நிலையங்களின் பிரதிநிதிகள் குழுவொன்று எதிர் வரும் 29 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத் தலைவர் சந்திரா இம்புள்தெணிய இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் புதிய வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதன் மூலமும் ஏற்கனவே உள்ளவற்றை மறுசீரமைப்புச் செய்வதன் மூலமும் அங்கு வாழும் இளைஞர் யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினையை ஓரளவு சீர் செய்ய முடியும் என தெரிவித்துள்ளார்.

கடந்த 2 ஆம் திகதியன்று 60 வர்த்தகப் பிரமுகர்கள் யாழ்ப்பாணம் வந்து வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்ந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## நிரந்தர போர் நிறுத்த ஒப்பந்தம் சமாதானத்திற்கான முதல் படி

### மனித உரிமைக்கான நிலையம்

(கொழும்பு)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் சமாதானத்துக்கான முதல் படி.

இதன்மூலம், விரைவில்நாட்டில் சமாதானம் நிதர்சனமாகுமென்று மனிதஉரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த நிலையம் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இது இரு தரப்பினர்டையிலும் நம்பிக்கையினைக் கட்டியெழுப்பியுள்ளது. இரு தரப்பினரும் பொது மக்களின்மனித உரிமைகளை மதித்து நடந்து கொள்வார்களென்று எண்ணுகின்றோம்.

நீண்டகாலம் சிறைகளில் வாடும் அரசியல் கைதிகள் குறித்த பாரிய பிரச்சினைகள் உள்ளன. பல நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டும் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படவில்லை. விசாரணைகளும் இடம்பெறவில்லை.

நாம் ஒரு மனித உரிமை அமைப்பென்ற வகையில் பெரும்எண்ணிக்கையினரான இடம்பெயர்ந்தோர் உட்பட சகலரினதும் மனித உரிமைகள் குறித்து கவலை கொண்டுள்ளோம்.

இந்த ஆரம்ப நடவடிக்கை நீண்ட காலமாக மக்கள் எதிர்பார்த்து நிற்கும் இறுதிச் சமாதானத்தை ஏற்படுத்த வழி வகுக்குமென்று நாம் நம்புகின்றோம். (உ)

## இன்று ஒரு தகவல்

### வேண்டிய வரம்

முன்னொரு காலத்தில் காட்டில் அறிஞர் ஒருவர் கடுந்தவம் செய்தார். கட்டுப்பாட்டோடும் மன ஒருமையோடும் அவர் செய்த கடுந்தவத்தைக் கண்டு மகிழ்ந்த கடவுள் அவர் முன் தோன்றினார்.

'அன்பனே! உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்' என்றார் கடவுள், பணிவாக வணங்கிய அறிஞர்' கடவுளே தாங்கள் தரும் வரத்தினால் நான் உலக எண்ணங்களில் சிக்கிக் கொள்ள வேண்டி வரும். நான் என்ற ஆணவம் எனக்கு ஏற்படும் என்னால் தான் எல்லாம் நடக்கிறது என்ற தற்பெருமை எனக்கு உண்டாகும். ஆகவே எனக்கு எந்தவரமும் வேண்டாம்' என்றார். இதை கேட்ட கடவுளும் அங்கிருந்து மறைந்தார்.

மீண்டும் அறிஞர் தவத்தில் ஆழ்ந்தார். மறுபடியும் அவர் முன் தோன்றியகடவுள்'ஏதேனும்ஒருவரத்தைநீஏற்றேயாக வேண்டும் என்று வற்புறுத்தினார். 'நான் எங்கு சென்றாலும் அங்கெல்லாம் வளமும் நல்ல செயல்களும் பெருக வேண்டும்ஆனால் அதேசமயம் அவை என்னால் தான் வந்தது என்ற ஆணவம் நான் கொள்ளக் கூடாது. இது தான் நான் கேட்கும் வரம்' என்றார் அறிஞர். அப்படியே வரம் தந்து விட்டுக் கடவுளும்மறைந்து விட்டார். அதன் பிறகு அந்த அறிஞர் எங்கு சென்றாலும் வளமும் நலமும் பெருகிற்று. தற்பெருமை கொள்ளாது எப்பொழுதும் பணிவோடு இருந்த அறிஞரின் புகழ் நாடெங்கும் பரவிற்று.

பேராசிரியர் எ. சோதி

## தென் பகுதியில் இருந்து வருவோர் தங்குவதற்கு விடுதி வசதியில்லை

### இருக்கும் விடுதிகளும் படையினர் கட்டுப்பாட்டில்

(யாழ்ப்பாணம்)

தென் பகுதியில் இருந்து யாழ்.குடா நாட்டிற்கு வருகை தரும் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நலன் விரும்பிகள் தங்குவதற்கு விடுதிகள் இன்றிபெரும் சிரமத்தினை எதிர் நோக்குகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சுமுகமான நிலையினை அடுத்து தென்பகுதியில் இருந்து வருவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது.

ஆனாலும் அவர்கள் இங்கு வந்து தங்கி நிற்பதற்கு போதியளவு விடுதிகள் வசதியின்மையினால் உறவினர் வீடுகளிலும், நண்பர்கள் வீடுகளிலுமே தங்கி நிற்கின்றனர்.

யாழ். நகரின் பிரபல விடுதிகள் மூன்று இராணுவத்தினரதும் பொலிஸாரதும் கட்டுப்பாட்டினுள் இருந்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

## கண்காணிப்புக் குழு அலுவலகம் திருமலையில் திறக்கப்பட்டுள்ளது

(திருமலை)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் அலுவலகம் ஒன்று திருகோணமலை பிரதேச செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக குழுவின் தலைவரான நோர்வேயைச் சேர்ந்த விக்ரோறியாலூம் தெரிவித்துள்ளார். (செ)

## மனிதர்கள் கடத்தப்படுவதை தடுக்கும் விதத்தில் கடவுச் சீட்டு

### விரைவில் அறிமுகம்

குடிவரவுகுடியகல்வுதிணைக்களம் மனிதர்கள்கடத்தப்படுவதைத் தடுக்கும்விதத்திலான விசேட அம்சங்கள் கொண்ட கடவுச்சீட்டொன்றை அறிமுகம் செய்யவிருக்கிறது.

இதனை உட்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்கபாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஒருநாட்டின் எல்லையை கடந்து இன்னுமொரு நாட்டிற்கு ஆட்களைக் கடத்தும் குற்றச் செயல்கள் மலிந்துவருகின்றன. இவற்றைத்தடுக்கும் நடவடிக்கைகள்எடுக்கப்படல் வேண்டும் எனத் தெரிவித்த அமைச்சர்,

முக்கிய தகவல்களை உள்ளடக்கும் விதத்தில் அடையாள அட்டைகளுக்கு 'பயோமெற்றிக்ஸ்' என்னும்புதியதொழில் நுட்பமுறை அறிமுகம் செய்யப்படும் எனவும் கூறினார். (உ)

## நீர்ப்பாசன அமைச்சர் இன்று யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

நீர்ப்பாசன, நீர்முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா இன்று செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

இன்று காலை 8.00மணிக்கு வருகை தரும் அமைச்சர், தொண்டைமானாறு, தென்மராட்சி நிலைமைகளைபார்வையிடவுள்ளார்.

பி. ப. 2.00 மணிக்கு யாழ். செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்துகொள்ளும் அமைச்சர் அங்கிருந்து வழுக்கையாற்றுப் பகுதியையும் சென்று பார்வையிடுவார்.

இன்று மாலையே அமைச்சர் கொழும்பு திரும்பவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## சமாதானத்தைநோக்கிய கலைப்பால யாத்திரை நாளை ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

கலைவழியினூடாக சமாதானத்தை நோக்கிய கலைப்பால யாத்திரை ஒன்றை திருமறைக் கலாமன்றம் மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் உள்ள அனைத்து திருமறைக் கலாமன்றங்களும் இவ் கலைப்பாலயாத்திரையில் பங்கேற்கின்றன.

இக்கலையாத்திரை 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 27ஆம் திகதிகளில் முறையே, பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபம் (கொழும்பு), மாத்தறை, இரத்தினபுரி, மட்டக்களப்பு திருகோணமலை, அனுராதபுரம், மன்னார், முல்லைத்தீவு யாழ்ப்பாணம் ஆகியஇடங்களில்இடம்பெறவுள்ளன.

சமாதானத்தை நோக்கிய இப்பயணத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் கலைஞர்கள் பங்கேற்கின்றனர். இலங்கைக்குள் அனைவரும் சகோதரர்கள் என்றகருத்தை வலியுறுத்தி இக்கலைப்பால யாத்திரை இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (உ-6)

## பெற்றோலின் விலை 2 ரூபாவால் அதிகரிக்கும்

(கொழும்பு)

பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் விலைகள் ஏப்ரல் 20 ஆம் திகதியிலிருந்து அதிகரிக்கவுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தலைவர் விமலசேனதெரிவித்துள்ளார்.

விலை அதிகரிப்பை மிகக் குறைந்த அளவிற்குக் கட்டுப்படுத்தி வைத்திருப்பது பற்றி ஆராய்வதற்கென விசேட குழுவொன்றும்அமைக்கப்பட்டுள்ளது.

ஈராக்மசகுஎண்ணெயைஏற்றுமதி செய்வதை நிறுத்தியுள்ளதால் உலக சந்தையில்மசகு எண்ணெயின் விலை அதிகரித்திருக்கிறது. இதன் காரணமாக இலங்கையிலும் இதன் தாக்கம் ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு தெரிவித்த கூட்டுத்தாபனதலைவர், இதனால் மட்டுமே விலையுயர்வு ஏற்படவேண்டியுள்ளதென்பதில்லை.

ஆனால் உலகச்சந்தையின் விலைகளை அனுசரித்துபுதிய விலைகளை நிர்ணயிப்பது என்று ஏற்கனவே தீர்மானம் இருந்ததாகவும்கூறியுள்ளார்.

பெற்றோல் லீற்றருக்கு இரண்டு ரூபாவினால் அதிகரிக்கலாமென்றும், இதற்கேற்ற வகையில் டீசல், மண்ணெண்ணெயின் விலைகளிலும் உயர்வுகள் ஏற்படுமென்றும் எதிர்வு கூறப்படுகிறது. (உ)

## சிங்கள இளைஞர்கள் யாழ். வருகை

(கொழும்பு)

நாட்டில் போர் ஓய்ந்து சமாதானத் தென்றல் வீச ஆரம்பித்துள்ளதையடுத்து தென்பகுதியில் இருந்து பெருமளவு சிங்கள இளைஞர்கள் யாழ்ப்பாணம் நோக்கிவர ஆரம்பித்துள்ளனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற கொடிய யுத்தத்தினால் மோசமாகச் சேதமடைந்த யாழ். குடா நாட்டைப் பார்வையிடும் நோக்குடனும்,

தடைப்பட்டுப் போனதமது நட்பைப் பலப்படுத்தும் நோக்குடனும் இவர்கள் இங்கு வருவதை அறிய முடிகிறது.

தனியார் வாகனங்கள்தரைவழிப் பாதையூடாகச் சென்றுவர அனுமதி வழங்கப்பட்டதே இவர்கள் இங்கு வந்து செல்ல ஏதுவாயிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

## நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் நாளை பிரபாவைச் சந்திக்கிறார்

(கொழும்பு)

கடந்தசனியன்று காலை கொழும்பு வந்து சேர்ந்த நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் விடர்ஹெல்கிஸன் நாளை வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதேவேளை, அரசும் விடுதலைப் புலிகளும் நேரடிப்

(7:ம் பக்கம் பார்க்க)

## விமானங்களுக்கு கட்டணம் அறவிடும் முறை மீண்டும் நடைமுறையில்

(கொழும்பு)

கொழும்பு கட்டு நாயக்க விமான நிலையத்திற்கு வரும் விமானங்கள் மற்றும் தரித்து நிற்கும் விமானங்களுக்கும் கட்டணம் அறவிடும் முறை மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

விமானநிலையத்திற்குவரும் விமானம் ஒன்றின் நிறையைப் பொறுத்து கட்டணம் அறவிடப்படும் என விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட பின்னரே இக் கட்டண அறவீடுகள் நிறுத்தப்பட்டிருந்தன. (செ)

## சிந்தனைக்கு விருந்து

### மௌனமாய் இருத்தல் நன்றோ?


மொழிவழுக்கள் பலஇன்று பெருகக் கண்டும்
மோனமாய் அறிவளார் இருத்தல் நன்றோ?
அழிவழக்குப் பேசுவோர் அநேக ராகி
அனைத்தையுமே சரிஎன்று வாதிக்கின்றார்
பழகுதமிழ்க் கலப்படங்கள் சிலவோ? மிக்க
பலநூறா யிரமாகப் பல்கக் கண்டும்
விழிமூடிச் செவிசாய்க்கா திருப்போ மாயின்
வீறழிந்து தமிழ்சாதல் வியப்ப தாமோ?

- பழையவன்

# தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் தலைமையகம் கொக்குவிலில் நேற்று திறந்து வைக்கப்பட்ட நிகழ்வின் காட்சிகள்











# தமிழர்களின் அடக்கப்பட்ட மன உணர்வின் வெளிப்பாடே பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு

## யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விளக்கம்

நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள எழுச்சிமிகு பொங்கு தமிழ் நிகழ்வு குறித்து அதன் ஏற்பாட்டாளர்களான யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட பொங்குதமிழ் எழுச்சி குறித்த விளக்கம் இங்கு தரப்படுகிறது.

அன்பானவர்களே!

பொங்கு தமிழ் ஓர் அதிசய நிகழ்வு. நீண்ட காலமாக அடக்கப்பட்ட மன ஆசைகள் உணர்வுடன் பொங்கி எழுந்தபோது அகிலத்தையே அதிர வைத்த ஓர் வரலாற்று நகர்வு.

தமிழர்களின் அபிலாசை குறித்து சர்வதேசம் கொண்டிருந்த சந்தேகங்களை, ஊகங்களை அர்த்தமற்றதாக்கி தமிழர்களின் ஆத்ம அபிலாசை, சுயநிர்ணயம், மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம்என்றும் அதற்காக தியாகங்களைத் தாங்கிப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளே தங்கள் தலைமை சக்தி என்றும் ஆதாரபூர்வமாக நிரூபித்துக்காட்டிய அகிலமெல்லாம் வாழும் தமிழ் மக்களின் ஆணை.

பல்வேறுபட்ட இடங்களில் வெவ்வேறு வாழ்வியல் முறைகளிடையே வாழ்ந்தபோது இந்த அபிலாசை என்னும் விடயத்தில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது என உணர வைத்த தமிழர்களின் ஒன்றுபட்ட உண்மையான உள் மன வெழுச்சி.

### தீர்வு என்ன?

பல தசாப்தங்களாகி தொடரும் இன நெருக்கடி உச்சம் பெற்ற வேளையில் அதை நிரந்தர தீர்வு நோக்கி நகர்த்தும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இம் முயற்சிகளின் விளைவாக மக்களின் அபிலாசை அல்லது மக்கள் ஆசைப்படும் தீர்வு என்ன? என்ற கேள்வி முன்எப்போதும் இல்லாத அளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

- அபிலாசை (ASPIRATION) - எனப்படுவது உயிர் மூச்சொலி கலந்த மெய்யொலி எனப் பொருள்படும். அதாவது வாழ்வுக்கு ஆதாரமான உயிர் மூச்சுடன் இரண்டறக் கலந்துள்ள உண்மையின் ஓசையாகும்.

கடந்த 7 வருடங்களாக ஆக்கிரமிப்புஇராணுவத்தின் உடல், உள அடக்கு முறைகளில் எம் தேசம் திறந்த வெளிச் சிறையானது. மக்கள் மனங்களிலெல்லாம் பயம் விஷ்வரூபம் எடுத்தாட்சி செய்ய, நம்பிக்கைகள் தொலைந்து போக, ஆளாள் மீதான சந்தேகம் உச்ச நிலையை அடைந்ததன். விளைவாக தமது அரசியல் அபிலாசைகள் குறித்து, பொது இடங்களில் கதைப்பது அருகிப்போய் மறந்தது.

நீண்ட காலம் பூட்டி வைத்த தோர் அறையில் உள்ள பொருட்களை மறநததுபோல் அந்த அபிலாசைகள் மக்களின் உள்மனப் படுக்கைகளிற்குச் சென்று உறங்கிப்போனது

### அபிலாசையை மறைத்த பயம்

அபிலாசையை பயத்தின் காரணமாக மறந்த அல்லது வெளியிடப்பயந்த மக்கள் கூட்டத்தை சாதகமாகப் பயன் படுத்திய (கதிர்காமர் - சந்திரிக்கா) போன்றோர் தம்வசம் இருந்த பொய் உரைகளை தமிழ் மக்களின் பெயரால் சிங்கள மக்களின் மீதும் சர்வதேசத்தின் மீதும் அள்ளித் தெளித்தது. இதற்கு ஆதரவாக தமிழர்களே அறியாத கொழும்பில் தங்கி இருக்கும் ஒரு சில சக்திகளும், மனித உரிமை என்ற போர்வைக்குள் இருந்துகொண்டு ஒத்தூதினர். ஜனநாயகம், மனித உரிமைபோன்ற மானிடநேசக் கோட்பாடுகளை முன்னெடுக்கும் சர்வதேசம்கூட ஓர் இனத்தின் அபிலாசை குறித்து தெரியாதவர்களின் கற்பனைக் கதைகளை நம்பும் அல்லது நம்பியது போல் நடிக்கும் ஓர் விசித்திரமான துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

தேசம் எங்கும் திறந்த வெளிச் சிறையாக மாறியபோதும் பல்கலைக்கழகம் ஒப்பீட்டளவில் பாதுகாப்பானதோர் இடமாக அதாவது வசதிகள் கூடிய சிறைச்சாலை போன்று தோன்றியது. முதலில் பல்கலைக்கழக மாணவர்கள் நம்பிக்கையான இடங்களை உருவாக்கிச் சிறு குழுக்களாக தம்மிடையே கதைத்து அபிலாசை குறித்து தெளிந்து எழுச்சி பெற்றனர். இம் மாணவர்கள் அனைவரும் பல்கலைக்கழக சமூகத்தை எழுச்சிப்படுத்தினர். பல்கலைச் சமூகத்தின் பிரதிநிதிகளான மாணவர்கள் ஊர் ஊராய் மக்களின் வேலைத் தளங்களுக்கு, இருப்பிடங்களுக்கு சென்று அவர்களுடன் கதைத்து நம்பிக்கை ஊட்டி தங்களை வெளிப்படுத்தினர். இதன் விளைவாக மக்கள் தமது ஆசைகளை உணர்ந்து தெளிந்து வெளிப்படுத்தத் துணிந்தனர்.

2001ம் ஆண்டு தை மாதம் 17ல் இவ்வாறு எழுச்சியுற்ற மக்கள் கூட்டம் தமது அபிலாசைகளை பொங்கு தமிழாக வெளிப்படுத்தத் துணிந்தார்கள். ஆனால் ஆசைகளைச் சொல்லக் கூட தமிழனுக்கு இந்த "ஜனநாயக" நாட்டில் இடம் இல்லை என ஆக்கிரமிப்பு இராணுவமும் பொலிஸாரும் மறுத்து. நாம் நினைத்துக் கூடப் பார்த்திராத அடக்கு முறையின் ஓர் பரிமாணத்தை நிருபித்துக் காட்டினர். அதுமட்டுமல்ல ஜனநாயகம், மனித உரிமை என்று வேடமிட்டு உலகிற்குக் காட்டிக் கொண்டிருந்த போலி முகத்தில் தம் இரு கைகளாலேயே அள்ளிச் சேறு பூசிக் கொண்டார்கள்.

துப்பாக்கிப் பிரயோகக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட நிலையில் தேவையற்ற இழப்புக்களையும் உயிர் ஆபத்துக்களையும் தவிர்க்கும் முகமாக மக்களை கடந்த பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டாமெனக் கேட்டுக் கொண்டோம். அங்குல இடை வெளியில்லாத ஆக்கிரமிப்பு இராணுவ வேலியின் நடுவில் நின்று மக்களிடையே சென்று ஊடாடி மனதை அறிந்து திருந்திய பல்கலைச் சமூகம் தமிழர்களின் உள்மன விம்பங்களை பிரதி பலிப்பவர்களாக அபிலாசைகளை வெளிப்படுத்த, அது தமிழர் வாழும் தேசமெல்லாம் பரந்து எழுந்து உலகின் செவிகளில் எல்லாம் அறைந்து மோதி சர்வதேசத்தின் கண்களை அகலத் திறந்தது. அந்நிகழ்வில் இராணுவவேலியின் இடைவெளிகளினூடாகப் புகுந்து, மதில் கடந்து, எம்முடன் வந்து கைகோர்த்து இணைந்த பல நூற்றுக் கணக்கான மத குருமார்களை, பாடசாலை மாணவர்களை, பொது மக்களை இதய நெகிழ்வுடன் நாம் நினைத்துப்பார்க்கின்றோம்.

### சிங்கள நண்பர்களுக்கு

சிங்கள நண்பர்களுக்கு நாம் கூற விரும்புவது.,

நாம் ஆசைப்படுவது எமது உரிமைகளை மட்டும்தான். உங்களது ஓர் அங்குல நிலத்திற்கேனும் நாம் ஆசைப்படவில்லை. உங்களது உரிமைகளைப் பாதிக்கும் வெறும் எண்ணக் கருத்துக்கள் கூட எம் மனங்களில் இல்லை. நாங்கள் உங்கள் எதிரிகள் அல்ல. ஏன்! ஓர் இராணுவ வீரனின் ஆத்மாவை சிதைப்பதுகூட எமது நோக்கமல்ல. ஆனால் ஆக்கிரமிப்புச் சின்னமாக எமது தேசத்தில் உங்கள் இராணுவம் கால் பதித்து நிற்பதை அடியோடு வெறுக்கிறோம்.

இன்று நிலைமைகள் மாற்றம் பெற்று சமாதான முயற்சிகள் நடைபெறுகின்றன. முன்பு குறிப்பிட்டது போல் மக்கள் ஆசைப்படும் தீர்வு என்ன? என்ற கேள்வி முனைப்புடன் முன்வைக்கப்படுகின்றது.

### மக்களுக்கு வாய்ப்பு

கடந்த பொங்கு தமிழில் மக்கள் திரண்டு தமது ஆசைகளை சொல்லும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இப்பொழுது அந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. அது மட்டுமல்ல எமது அபிலாசைகளை ஒரே குரலில் உணர்வுடன் வெளிப்படுத்தும்போது சர்வதேசத்திற்கும் சிங்கள மக்களிற்கும் எமது குரலிற்கு மதிப்பளித்து அது குறித்து ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளும் நிலை தோன்றும். இது ஒரு நிரந்தர சமாதனத்திற்கு வழிவகுக்கும். எனவே பட்டி தொட்டி எல்லாம் வாழும் மக்கள் தமது ஆசையை எடுத்து உள்ளங்கையில் தாங்கியவாறு வாருங்கள். முன்னெப்போதும் திரளாத பெரும் கூட்டமாகத் திரண்டு!

### வருடத்தில் ஓர் நாள்

சுய நிர்ணயம், மரபு வழித் தாயகம், தமிழ்த்தேசியம் ஆகிய வற்றிற்கு நாம் ஆசைப்படுகிறோம்.

எமது தலைமைச் சக்தி தமிழீழ விடுதலைப் புலிகளே எனக் கூறுகிறோம்.

ஆக்கிரமிப்பின் சின்னமாக எமது தேசத்தில் இராணுவம் இருப்பதை அடியோடு வெறுக்கிறோம். எனமெலெழுந்து வரும் எம் மன உணர்வுகளை வெளிப்படுத்துவோம். கௌரவமான, நீதியான, சமாதனத்தை அடைவதற்கு வருடத்தில் ஓர் நாள் எதிர் வரும் சித்திரை 17ல் யாழ் பல்கலை மைதானத்தில் "பொங்கு தமிழ்"

உயர்ந்தவர்கள்
நாமெல்லோரும் உலகத்தாய் வயிற்று
மைந்தர்கள்
நசிந்து இனிக் கிடக்க மாட்டோம்
நாம் எல்லாம் நிமிர்ந்து நிற்போம்

யாழ் பல்கலைக்கழக சமூகம்

---

### மர்மமான முறையில் மரணம்

சிகை அலங்கரிப்புத் தொழிலாளி ஒருவர் தனது சலூனுக்குள் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். யாழ்ப்பாணம் டேவிட் றோட் சந்தியில் உள்ள சலூனில் சின்னத்தம்பி நவரட்ணம் என்பவரே இறந்த நிலையில் காணப்பட்டவர் ஆவார். அவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (இ)

# நாளை பொங்கு தமிழ் எழுச்சி ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

## மக்கள் கூடும் இடங்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள எழுச்சிமிகு பொங்கு தமிழ் நிகழ்வின் செயற்பாடுகள், ஒழுங்கு முறைகள் குறித்து யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விளக்கக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதன் விவரங்கள் வருமாறு;

நாளைய தினம் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வானது மூன்று முனைகளில் இருந்து எழுச்சிப் பேரணிகளுடன் ஆரம்பமாகும்.

நல்லூர் கந்தசாமி கோவில் முன்றல், கொக்குவில் இந்துக் கல்லூரி முன்றல், யாழ் நகர மத்திய பேரூந்து நிலையம் ஆகிய மூன்று முனைகளில் இருந்து எழுச்சிப் பேரணிகள் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகி யாழ் பல்கலைகழகத்தின் பிரதான மைதானத்தை வந்தடையும்.

* தென்மராட்சி, வடமராட்சி, கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, ஆவரங்கால் (750,751,769,811 ஆகிய நெடுஞ்சாலை வழியே) ஆகிய இடங்களில் இருந்து வந்தடைகின்ற மக்கள் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பமாகும் ஊர்வலத்தில் இணைந்து கொள்வார்கள்.

*யாழ்ப்பாணம், குருநகர், பாசையூர், அரியாலை, தீவகம், அராலி, ஆனைக்கோட்டை போன்ற யாழ் நகரத்தை அண்டிய பிரதேசத்தில் இருந்து வந்தடைகின்ற மக்கள் யாழ் நகர மத்திய பேரூந்து நிலையத்தில் இருந்து ஆரம்பமாகும் ஊர்வலத்தில் இணைந்து கொள்வார்கள்.

* வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, வலி தென்மேற்கு, ஆகிய பிரதேசங்களில் இருந்து வந்தடைகின்ற மக்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி முன்றலில் ஆரம்பமாகும் ஊர்வலத்தில் இணைந்து கொள்வார்கள்.

மேற்படி எழுச்சி ஊர்வலங்கள் ஆரம்பமாகவுள்ள மூன்று இடங்களுக்கும் பொது மக்கள் வந்தடைவதற்கான போக்குவரத்து ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வுக்கு மக்களை ஏற்றி வருகின்ற போக்குவரத்துச் செயற்பாடுகள் நாளை புதன்கிழமை (17.04.02) முற்பகல் 10.00 மணி தொடக்கம் மேற்கொள்ளப்படும். இந்நிகழ்வில் கலந்துகொள்ளவிருக்கின்ற மக்கள் அனைவரையும் தங்கள் தங்கள் பிரதேசங்களுக்கு அண்மையிலுள்ள பிரதான வீதியில் கூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எழுச்சி நிகழ்வுகள் யாவும் மாலை 3.30 மணியளவில் யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகும். இந்நிகழ்வுகள் யாவும் மாலை 5.30 மணிக்கு நிறைவு பெறும்.

பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு நடைபெறவுள்ள நாளையதினம் (புதன்கிழமை) அனைத்து மக்களும் இந்நிகழ்வில் கலந்து கொள்ள வசதியாக அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள், பொதுச் சந்தைகள், கல்வி நிறுவனங்கள், கணனி கல்வி நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடி ஒத்துழைப்பு வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பல்லாயிரக் கணக்கான மக்கள் நாளைய பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொள்ள இருப்பதால் அனைத்து உணவகங்களையும் திறந்து செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இந்நிகழ்வுகள் முடிவடைந்ததும் அனைத்து மக்களும் வீடுகளுக்கு செல்வதற்கான சகல போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப் பட்டுளது என்றும் அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### தினசரி 1500........

மக்களின் எண்ணிக்கையும் சில தினங்களாக அதிகரித்துள்ளது.

சில தினங்களில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் இந்த சோதனைச் சாவடி ஊடாக பயணத்தை மேற்கொள்வதால் பயணிகள் யாவரும் சோதனை செய்யப்பட்டே அனுப்பப்படுவதால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் பல்வேறு அசௌகரியங்களிற்கு முகம்கொடுப்பதாக படைத்தரப்பு அறிவித்துள்ளது.

இவ்வாறு பயணத்தை மேற்கொள்வதற்கு சமூகமளிக்கும் பயணிகள் தேவையற்ற பிரச்சனைகளிற்கு முகம் கொடுப்பதை தவிர்க்கும் முகமாக 2002 ஏப்ரல் மாதம் 17ம் திகதி முதல் நாளொன்றுக்கு 1500(ஆயிரத்து ஐந்நூறு) பயணிகள் குடா நாட்டுக்குள் பிரவேசிக்கவும் குடநாட்டிலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவார்கள் என்பதை யாழ் மக்களிற்கு அறியத் தருகிறோாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மீளக் குடியமர்த்தக் கோரி சங்கத்தானையில் வீதி மறிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சங்கத்தானையில் அப்பகுதி மக்கள் நேற்று பிரதான வீதியை மறித்து திடீரென மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் காலை 8.00 மணி முதல் 10.00 மணிவரை போக்குவரத்துக்கள் தடைப்பட்டது.

சங்கத்தானையில் உள்ள ஒரு பகுதி மக்கள் தம்மை தமது பகுதியில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரியே இம்மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதே வேளை மறியலில் ஈடுபட்டவர்களுடன் படையினர் கலந்துரையாடி 10 நாட்களுக்குள் அப்பகுதியில் மக்களை மீளக் குடியமர அனுமதிப்பதாக உறுதியளித்தனர்.

இதனை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (இ-43)

## அதிபர்கள், ஆசிரியர்களை

# பொங்கு தமிழ் நிகழ்வில் பங்குபற்றுமாறு ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பணம்)

யாழ் பல்கலைக்கழகத்தில் நாளை நடைபெறும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் யாழ் குடாநாட்டு அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டு கோள் விடுத்துள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணம் கொக்குவில் மற்றும் நல்லூர் பகுதிகளில் இருந்து ஆரம்பமாகும் ஊர்வலத்தில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களை ஒருங்கிணைந்து ஊர்வலத்தில் பங்கு பற்றுமாறு பாடசாலை அதிபர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாளை பிற்பகல் 2மணிக்கு சகல தமிழர் ஆசிரியர் சங்கக்கிளை நிர்வாக சபை உறுப்பினர்களையும் நல்லூரிலுள்ள சங்க காரியாலயத்திற்கு வருகை தருமாறு சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் கேட்டுள்ளார். (இ)

---

புலிகளின்..................

விடுத்த ஆஞ்சநேயர் மேலும் தெரிவிக்கையில்:-

யாழ் குடாநாட்டில் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட வருகை தந்துள்ள புலிகளின் உறுப்பினர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் புலிகளின் தலைமையகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

எனவே விஷமிகளை அடையாளம் கண்டு தம்முடன் 3747 என்ற இலக்க தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு தெரிவிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (இ-10)

# அரசு-புலிகள் சமாதான முயற்சிகள் முன்பைவிட இன்று முன்னேற்றகரமானவை

## 'வலம்புரி'க்கு வருகைதந்த வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமாதானத்திற்கு முன்னைய காலங்களில் எடுக்கப்பட்ட முயற்சிகளிலும் பார்க்க இன்று நல்ல முன்னேற்றங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு புதிய ஜனநாயக இடது சாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வலம்புரி அலுவலகத்திற்கு சித்திரை வருடப் பிறப்பன்று வருகைதந்த அவர் ஆசிரிய பீடத்தினருடன் இன்றைய அரசியல் நிலை குறித்து கலந்துரையாடினார்.

அவருடன் யோசேப் அருள்வாசகம், டைட்டஸ் பெர்னாண்டோ ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

வாசுதேவ நாணயக்கார மேலும் பேசுகையில் கூறியதாவது,

### சமாதானத்தை விரும்புகின்றனர்

தமிழ் மக்களில் பெரும்பான்மையானவர்களும், சிங்கள மக்களில் பெரும்பான்மையானவர்களும் எப்படியாவது சமாதானம் ஏற்பட வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறார்கள்.

சமாதானம் நோக்கிய பாதையில் சிங்கள மக்கள் மத்தியில் புதியதோர் மன மாற்றம் இப்போது ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. எனவே சமாதானத்திற்கான நல்ல சூழ் நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

இனப்பிரச்சினையை சமாதான முறையில் தீர்க்க வேண்டும் என்ற வெளிநாட்டு அழுத்தங்களும் அரசாங்கத்திற்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது அத்துடன் யுத்தம் சமாதானத்தைக் கொண்டுவராது என்ற முடிவும் அரசின் பக்கம் உருவாகியது. இத்தகையசில தவிர்க்க முடியாதகாரணங்களால் அரசு சமாதானப் பேச்சுவார்த்தையில் இறங்கியது.

### இலங்கையில் அமெரிக்கா கால் வைக்கும்

ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தை முறிவடையுமானால் எப்படியும் யுத்தம் தொடங்கும். அந் நிலையில் இலங்கையில் அமெரிக்கா கட்டாயம்கால் வைக்கும். அதன் பின் இலங்கை அமெரிக்காவின் யுத்த தளமாக மாறும் ஆபத்து உண்டு. இது இலங்கைக்கே பெரிய அழிவுகளை ஏற்படுத்தும்.

### சிங்கள மக்கள் தமிழரின் உரிமைகளை ஏற்கிறார்கள்

ஒரு போராட்டத்தில் நிரந்தரமாக அமிழ்ந்துள்ள சமுதாயம் சமாதானம் நோக்கிய பாதையில் திரும்பியுள்ளமை இங்கு முக்கியமாக கவனத்தில் கொள்ளத்தக்கது

இதனை தமிழரின் சுயநிர்ணய உரிமையை பெரும்பான்மை சமூகத்தினர் ஏற்றுக்கொண்ட முதல் சந்தர்ப்பமாக நான் கருதுகின்றேன்.

அண்மையில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது பெரும்பான்மை சிங்கள மக்கள் அங்கீகாரத்தின் வெளிப்பாடு என்றே கொள்ளலாம்.

இனவாதம் பேசுகின்ற சில சிங்கள அரசியல் கட்சிகள் சில இன்றும்சமாதானத்திற்கு எதிராகவே செயல்படுகின்றன. ஆனால் இது குறித்து நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

### புலிகளின் அரசியல் முதிர்ச்சி

1994 ஆம் ஆண்டில் அன்றைய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையின் போது விடுதலைப்புலிகள் சார்பில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை விட இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் தொடர்ந்துமேற்கொள்ளப்படுகின்ற முன்னெடுப்புகள் மூலம் அவர்களின் அரசியல் முதிர்ச்சியையும் சமாதானத்தைநோக்கிய நகர்வில் அவர்களுக்குள்ள அதீத அக்கறையையும் புரிந்து கொள்ள முடிகிறது.

### சமாதானத்தில் எமது பங்கு

சமாதானம் நோக்கிய பாதையில் ஏதாவது தடங்கல்கள் முரண்பாடுகள் ஏற்படும் போது அவற்றை நீக்குவதற்கு எமது ஆலோசனைகள், பங்களிப்புகளை காலத்திற்குக் காலம் வழங்குவோம்.

புரிந்துணர்வுஒப்பந்தம் மற்றும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் போதுமுரண்பாடுகள் சிக்கல் நிலைகள் ஏற்படலாம். ஆனால் நடைமுறைச் சிக்கல்களை நீக்கி வெற்றிகரமாக பேச்சு வார்த்தையை முன்னெடுப்பதில் சகலரும் பங்கேற்க வேண்டும்.

### பேச்சுவார்த்தையில் நம்பிக்கை

இப்பேச்சுவார்த்தை நல்ல முறையில் நடைபெறும் என நம்பிக்கையுடன் எதிர் பார்ப்போம். அது மட்டுமன்றி சமாதானம்நோக்கியநகர்வில்நாம் வெறும் பார்வையாளராக மட்டுமல்லாமல் பங்காளிகளாக மாறவேண்டும்.

### பிரதான எதிர்ப்புக்கட்சி

சமாதானத்திற்கு எதிரான கருத்துக்கள் கூறும் வரிசையில் மக்கள் விடுதலை முன்னணியே(ஜே.வி.பி பிரதான எதிர்ப்புக் கட்சியாக விளங்குகிறது.

மக்கள்விடுதலை முன்னணியுடன், பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஒரு குழுவினரும் சந்திரிகாவின் ஆசியுடன் சமாதானத்திற்கு எதிராக செயற்படுகின்றனர். அரசியல் லாபம் கருதியே இவர்கள் இவ்வாறு செயல்படுகின்றனர்.

வடக்கு-கிழக்கு தமிழரும் முஸ்லிம்களும் வாழ்ந்த பூமி என்பதையும் தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு என்பதையும் சமாதான முயற்சிவெளிப்படுத்திநிற்கின்றது

### தமிழருக்காகபேசியதால் பழிவாங்கப்பட்டேன்

தமிழர் உரிமைகள் குறித்து குரல் கொடுத்த காரணத்தால் நான் பல வகைகளில் பழிவாங்கப்பட்டேன் எனினும் 1994ம்ஆண்டு பொதுத் தேர்தலில் இரத்தின புரியில் முதன்மை வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனவே இலங்கை அரசியல் வரலாற்றில் 1994ம் ஆண்டு பொதுத் தேர்தலானது வித்தியாசமான கொள்கைக்கு வாக்களித்ததன் மூலம் ஒரு திருப்புமுனையை இலங்கை வாக்காளர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

இனவாதத்திற்கு முக்கியம் கொடுக்காமல் சமாதானம் நோக்கிய நகர்விற்கு உற்சாகமளிப்பதாக தேர்தல் முடிவுகள் அன்று அமைந்திருந்தன.

### சமாதானம் பேசியதால் ஐதேமு வென்றது

தற்போதும்கூட ஐக்கிய தேசியமுன்னணிக்குகிடைத்த வெற்றி சமாதானத்திற்கு வலுவூட்டுவதாகவே அமைந்திருந்தது.

இப்போதைய சமாதான முயற்சிகள்முன்னெடுப்புகள், முடிவுகள் குறித்து நான் சரியான கணிப்பு எதுவும் கூற முடியாது. எனினும் ஒரு அரசு இரு நிர்வாகப் பிரிவுகள் என்ற அடிப்படையில் இப்பிரச்சினை அணுகப்படலாம் என நம்புகின்றேன்.

மத்திய அரசு மாநில அரசுகள் என்ற வகையில் அல்லாமல் நாம் புதிய ஒரு கோணத்தில் எங்களுக்கு ஏற்ற விதத்தில் தீர்வு முயற்சியை மேற்கொள்ளவேண்டும்.

முன்பே தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து சமாதான முயற்சிகளை மேற்கொண்டிருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்.

### பௌத்த சிங்கள நாடு

இலங்கையில் இனவாதம் வளர்வதற்கு அன்றைய அரசியல் தலைவர்கள் மட்டும் தான் காரணம் எனக்கூற முடியாது 1948 இல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது முதல் 1956 வரையில் இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்ற மனப்போக்கே சிங்கள அரசியல்வாதிகள் மத்தியில் வளர்ந்து வந்தது.

இந்த மனப்போக்கானது நீண்ட காலம் நிலவி வந்தமையால் சிறுபான்மையினரின் உரிமைகள் சிங்கள பௌத்த கலாசாரத்திற்கு உட்பட்டதாக இருக்கவேண்டும் என்றே நம்பப்பட்டது.

ஆனால் கடந்த 25 அல்லது 30 வருட காலமாக அந்த பௌத்த வாத மனப்போக்கு ஓரளவு மாற்றப்பட்டது.

இவ்வாறு பெரும்பான்மை சிங்கள மக்களின் மனப்பாங்கு மாறியமைக்கு பிரதான காரணம் தமிழ் அரசியல்வாதிகள் ஊட்டிய தமிழ்த்தேசியஉணர்வும் அவற்றிலிருந்து கிளர்ந்தெழுந்த தமிழ் இளைஞர்களின் போராட்டமுமே என்று கூறலாம். (க-எ)

# தேச விடுதலையோடு சமூக விடுதலையையும் முன்னிறுத்தியதே எமது போராட்டம்

## வரவேற்பு நிகழ்வில் தமிழ்விழி

(யாழ்ப்பாணம்)

'நாம் தேசவிடுதலையோடு கூடிய சமூக விடுதலையையும் முன்னிறுத்தியே போராடி வருகின்றோம். சமுதாயத்தில் காணப்படும் பிற்போக்குத்தனங்களை உடைத்தெறிந்து ஆளுமைகொண்ட பெண்களாக எமது மகளிர் படையணி திகழ்கிறது.'

யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட போராளிகள் வரவேற்பு நிகழ்வில் உரையாற்றிய விடுதலைப்புலிகள் மகளிர்அமைப்பைச் சேர்ந்த தமிழ்விழி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது தாய்நாட்டுக்குச் செய்யும் கடமையையே நாம் செய்து வருகின்றோம். உங்கள் வரவேற்புஎழுச்சி எமது பலத்தை இன்னும் அதிகரித்துள்ளது. உலக விடுதலைப் போராட்டங்கள் யாவற்றிலும் திடீர் மாற்றத்தை ஏற்படுத்தியவர்கள் மாணவர்களே.

எமது இனத்தின் குமுறலை வெளியிட்ட, மாணவர்களால் வழிநடத்தப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்வுமூலம் உலக நாடுகள் இதுவரை கொண்டிருந்த கருத்துக்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. உலகின் மூலை முடுக்கெல்லாம் தமிழனின் வீரம் பேசப்பட்டுள்ளது என்றார்.

உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேசுகையில் கூறியதாவது;

முகமாலையில் கூடிய மக்கள்கூட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்க காட்சியாகும். மக்கள்எல்லாம் மக்கள்எல்லாம்...யார்பக்கம் என்பதை இது எடுத்துக்காட்டியது.

இது இன்று நேற்று ஏற்பட்ட ஒன்றல்ல என்றோ தெரிந்தவிடயம். தமதுஇளமைகளை மண்ணுக்கும் மக்களுக்கும் ஆகுதியாக்கியவர்களின் பின்னால் மக்கள்அணி திரண்டுள்ளனர்.

எமது இலக்கைஅடைய ஒற்றுமை அவசியம். நாம் சமயத்தாலோ சாதியாலோ ஒன்றிணைய முடியாது. தமிழ் மொழி ஒன்றின் மூலமே நாம் ஒன்றாகவேண்டும் என்றார்.

விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ. குமாரவடிவேல் பேசுகையில் கொள்கை மீது வைத்திருக்கும் உறுதியான அசைக்கமுடியாத நம்பிக்கை, அர்ப்பணிப்பு, தியாக சிந்தை, சலுகைகளுக்காக விலைபோகாத தன்மை என்ற ரீதியில் நாம் விடுதலைப்புலிகள் மீது பெருமதிப்பு வைத்திருக்கின்றோம்.

போராடும் திறனோடு அரசியல் காய்நகர்த்தலிலும் திறமையானவர்கள் என்பதை அவர்கள் இப்போது நிரூபித்து இருக்கிறார்கள்.

விடுதலைப்புலிகளிடம் இருந்து எமது மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பல விடயங்கள்இருக்கின்றன. விடுதலைப்புலிகளின் ஆதரவாளனாகக்காட்டிக்கொண்டு செயற்பட்டவன் நான் அல்லன் ஆனால் அவர்கள்மீது பெருமதிப்பு வைத்திருக்கிறேன் என்றார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர்ப. கோபாலகிருஷ்ண ஐயர் பேசுகையில் சமாதானத்தின் பெறுமதி அளப்பரியது அதற்காக எமது போராளிகள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர்.

தமிழ்த் தேசிய இனத்தின் உரிமையை மறுத்து வாழ முடியாது. விடுதலைப்புலிகள் கௌரவமான சமாதானத்தைப் பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கு இருக்கிறது என்றார்.

மருத்துவபீடாதிபதி செல்வி வசந்தி அரசரட்ணம் உரையாற்றும்போது;

தமிழர்கள்இலங்கையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். பல விடயங்கள் குறித்து தீர்வின்போது ஆராயப்பட வேண்டும் அதே வேளை யாழ்ப்பாணத்தில் நாம் எமது கலாசாரத்தை இழந்து நிற்கின்றோம். கல்வியில் பின்னடைந்திருக்கின்றோம். இவற்றை போராளிகள் கவனத்தில் எடுத்து தமது செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்கின்றேன் என்றார்.

போராளி இலக்கியன் உரையாற்றும் போது;

'எமது அரசியல் பணிக்காக நாம் 7 ஆண்டுகளின் பின்னர் இங்கு பிரவேசம் செய்துள்ளோம். 'கல்வி போராட்டத்தின் காப்பரண், போராட்டம் கல்வியின் காப்பரண்' இது தலைவர் அடிக்கடி கூறும் வாக்கியம்.

போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது மாணவச் சமூகமே நீங்கள் பக்க பலமாக இருந்ததனால் நாம் பல வெற்றிகளைக் குவித்தோம். பதினேழாயிரம் போராளிகளின் தியாகத்தால் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றோம் என்றார். (உ-106)

## பதிவு செய்க

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் கடந்த காலங்களில் தொழில் துறை நிலையங்களில் பயிற்சி பெற்று இதுவரை சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளாதவர்களை சான்றிதழ்களை பெறும் பொருட்டு தங்களுடைய பெயர்களை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யுமாறு தொழில் துறை திணைக்களம் அறிவித்துள்ளது. (உ-10)

## அலங்காரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மத்தி அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய அலங்காரத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. (செ)

பெருமை உடையவர் ஆற்றுவர் ஆற்றின்
அருமை உடைய செயல்.

-குறள்

# வலம்புரி

## அதிசயமான உண்மை

அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது.

அதற்குச் சான்றாக பல அறிகுறிகள், நிகழ்வுகள் நடைபெற்ற வண்ணமுள்ளது. குறிப்பாக யாழ் மாவட்ட மக்களை இதுவரை காலமும் அன்னியப்படுத்தியிருந்த யாழ்-கண்டி வீதி திறககப்பட்டுள்ளது.

அதேவேளை விடுதலைப் புலி உறுப்பினர்கள் யாழ் மாவட்டத்திற்கு உத்தியோக பூர்வமாக வருகை தந்துள்ளனர். இவை அரசு- புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வின்- சமாதான முயற்சியின் வெளிப்பாடாகும். இவை ஒருபுறம் நடைபெற மறுபுறத்தில் விடுதலைப் புலிகளுக்கும்- முஸ்லிம் தலைவர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மலையகதமிழ்த்தலைவர்களுக்குமிடையே கற்பனையிலும் எண்ணிப் பார்க்க முடியாத இணக்கப்பாடுகள்- புரிந்துணர்வுகள்- இருதரப்பு உடன்பாடுகள் என்பன ஏற்பட்டுள்ளது. இதில் யாழ் மாவட்டம், மற்றும் வன்னிப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீண்டும் அந்தந்த இடங்களில் குடியமர வருமாறு தலைவர் பிரபாகரன் விடுத்த அறிவிப்பு பெரியதொரு மாறுதலை, சமாதான சமிக்ஞைகளை வெளிக்காட்டுகிறது. இவற்றையெல்லாம் பார்க்கும் போது நடப்பவை நிஜ உலகில்தான் நடக்கின்றனவா என்ற கேள்விகள் எழுகின்றன. தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள நிலைமைபோராட்ட வரலாற்றில் என்றுமில்லாத நிலை.

அதாவது கடந்த ஏப்ரல் 8 ந் திகதிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள், இராணுவம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புளொட், ஈ.பி.டி.பி, . ஈ. பி. ஆர். எல்.எவ் (வரதர் அணி) என அனைத்துத் தரப்புகளும் ஏககாலத்தில் ஒன்றாக- எதிர்ப்பின்றி- அச்சமின்றி யாழ்ப்பாணம் என்ற வீட்டில் குடியிருப்பதைப் பார்க்க முடிகிறது. இத்தகைய ஓர் சூழ்நிலை சமாதானத்தின் அறிகுறி எனக் கூறுவதில் எந்தத் தவறுமில்லை. இந்த அதிசயமான ஆனால் உண்மையான நிகழ்வு நிச்சயம் சமாதானத்தை நமக்குத் தரும்.

# கண், மூளை, இதய நோய்களை அவதானித்தே உயர் குருதி அமுக்க நோயை உறுதிப்படுத்துவர்

பொன்னுத்துரை பிரதீபன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

உயர்குருதியமுக்கம் Hypertension இன்று பரவலாக எம்மத்தியில் உள்ள பிரச்சினையாகும். இது சாதாரண வழக்கில் ''பிரசர்,' (Pressure) எனக் குறிப்பிடப் படுகின்றது. குருதி அமுக்கம் சுகதேகிகளுக்கு குறிப்பிட்ட அளவில் இருக்கும். இந்த அமுக்கம் சாதாரணமாக இருக்கவேண்டிய அளவைவிட அதிகமாகும் போதே அது ஒரு நோயாகிறது.

### உயர்குருதி அமுக்கம்

சாதாரண குருதிஅமுக்கம் இதயத்தொழிற்பாட்டின் இரண்டு நிலைகளில் அளக்கப் படுகின்றது. இதயம் சுருங்கிக் குருதியை வெளியே தள்ளும் போது (Systole) உண்டாகும் அமுக்கம் கோட்டிற்கு மேலேயும், இதயம் தளரும் போது (Diastole) உண்டாகும் அமுக்கம் கோட்டிற்கு கீழும் வைத்தியர்களால் எழுதப்படும்.

## மருத்துவ விளக்கம்

சிஸ்டொலிக்
உ-ம் குருதிஅமுக்கம்
டயஸ்டொலி
குருதிஅமுக்கம்

சுகதேகி ஒருவரில் இது $\frac{120}{80}$ mmHg ஆகஇருக்கும்

சாதாரண குருதிஅமுக்கம் பல காரணிகளில் தங்கியுள்ளது. மனக்குழப்பம், உடல் அப்பியாசம், வைத்தியரைக் கண்ட பயம் போன்றனவும் ஒருநபரின்குருதி அமுக்கத்தை திடீரென அதிகரிக்கலாம்.

ஒரு நபரின்சாதாரணகுருதி அமுக்கமானது வயது, பால், இனம், நாடு போன்ற பலகாரணிகளில் தங்கியுள்ளது.

பொதுவாக 140/90 mmhg க்கு மேற்படின் அது உயர் குருதி அமுக்கம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

நோயாளியின் குருதி அமுக்கத்தை அளக்கும் வைத்தியர் உயர்குருதி அமுக்கத்துடன் அதனால்கண், மூளை, இதயம் என்பவற்றில்ஏற்படும்கோளாறுகளும் சேர்ந்து காணப்பட்டால் அந்த நோயாளி உயர் குருதி அமுக்க நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். என்று முடிவு செய்கின்றார்.

### வைத்தியர் முடிவெடுப்பார்

எவ்வித ஏனைய கோளாறுகளுமின்றி, குருதி அமுக்கம் மட்டும் ஓரளவிற்கு அதிகரித்துக் காணப்படில் 2-3 கிழமைகளின் பின்னர் மீண்டும்குருதி அமுக்கம் அளக்கப்படும். மீண்டும் அளக்கும் போது உள்ள குருதிஅமுக்கம், நோயாளியின் வயது. தொழில், அவருக்குள்ள வேறுநோய்கள், அவர் பாவிக்கும் ஏனைய மருந்து வகைகள போன்ற பலகாரணிகளைப் பயன்படுத்தி வைத்தியர் முடிவு எடுக்கிறார்.

ஆகவே இந்த விடயத்தில் ஒரு நோயாளி இன்னொரு நோயாளியுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்ப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

### உயர் குருதி அமுக்கம் உண்டாவதற்கான காரணம்

★ 95% ஆன நோயாளிகளின் உயர் குருதி அமுக்கத்திற்கு எவ்வித காரணமும்காணப்படுவதில்லை. (காரணம் அற்ற உயர் குருதி அமுக்கம்)

★ மிகுதி5% நோயாளிகளில் உயர் குருதி அமுக்கத்திற்கு ஏதாவது காரணம் காணப்படும். (காரண வழி உயர் குருதி அமுக்கம்)

இந்த 5% ஆன நோயாளிகளை இனங்கண்டு அவர்களின் நோய்க்குரிய காரணத்தைக் கண்டறிதல் அவசியம்.

ஏனெனில் நோய்க்கான காரணத்தை குணப்படுத்துவதன்மூலம் உயர்குருதி அமுக்கத்தை முற்றாகக் கட்டுப்படுத்தலாம்.

### உயர் குருதி அமுக்கத்தைஉண்டாக்கக் கூடிய சில நோய்கள்

(1) சிறுநீரக நோய்கள் (KIDNEY DISORDERS)

(உதாரணம்) சிறுநீரகத் தொழில் நலிவு (Renal failure), சிறுநீரகஅழற்சி

(2) அகஞ்சுரக்கும் சுரப்பி நோய்கள

(உதாரணம்) அதிரீனல் சுரப்பியில் ஏற்படும் நோய்கள்

(3) பிறப்பிலே ஏற்படும் இருதய நோய்கள்
(உதாரணம்) நாடிச்சுவர் சுருக்கம்.

(4) மருந்து வகைகள்
(உதாரணம்)ஈஸ்ட்ரோஜன் ஸ்டீரொய்ட்

முக்கியமாக சில காரணிகள் ஒரு நபரிற்கு உயர் குருதி அமுக்கம் ஏற்படக் கூடிய சந்தர்ப்பத்தை அதிகரிக்கக் கூடியவை. )RISK FACTORS அவையாவன.

(1) பிறப்புரிமை(GENETIC FACTORS)
(2) மன உளைச்சல்
(3) அதிக உடற்பருமன்
(4) உணவில் உப்பு அதிகளவில் சேர்த்துக்கொள்ளல்
(5) மதுபானம் அருந்துதல்
(6) புகைப் பிடித்தல்
(7) கொழுப்புணவு

### உயர் குருதி அமுக்கத்தின் அறிகுறிகள்

உயர் குருதி அமுக்கத்திற்கு என்று வரையறுக்கப்பட்ட அறிகுறிகள் (Symptoms) என்று எதுவும் கிடையாது. உயர் குருதி அமுக்க நோயாளர்களில் காணப்படும் அறிகுறிகள் யாவும் பொதுவாக அதனால் ஏற்படும் விளைவுகளினாலாகும்.

### உயர் குருதி அமுக்கத்தால் பாதிக்கப்படும் அங்கங்களும், விளைவுகளும்

1) இதயம்- (குருதிச்சுற்றோட்டத் தொகுதி) மாரடைப்பு இதயச் செயல்நலிவு (CARDIAC FAILURE) சுற்றைய நாடி நோய்.

2) மூளை நரம்புத்தொகுதி மூளை குருதிநாடி உடைதல் குருதி உறைதல் (பக்கவாதம் ஏற்படலாம்)

3) சிறுநீரகம்- சிறுநீரகச் செயல் நலிவு (RENAL FAILURE)

4) கண் - உயர் அமுக்க விழித்திரை நோய் (பார்வையை இழக்க நேரிடலாம்)

இத்தகையபாதிபபுக்களைப் பினவரும் முறைகளால்கண்டு பிடிக்கலாம்.

நோயாளியின் நோய்வரலாறு

நோயாளியில் காணப்படும் அறிகுறிகள

கணகளை விசேட கருவிகளைப் பயன்படுத்தி பரிசோதித்தல். (OPHTHALMOSCOPY)

சிறு நீர், குருதிப் பரிசோதனைகள்

எக்ஸ்ரே, ஈ.சீ.ஜீ. பரிசோதனை

அல்ட்ரா சவுண்ட் பரிசோதனை.

### உயர் குருதி அமுக்கத்திற்கான காரணத்தைக் கண்டறிதல்

ஒரு நபரிற்கு உயர் குருதி அமுக்கம் உண்டுஎன்று முடிவு எடுத்த பின்னர், வைத்தியருக்கு மேலும் இரண்டு கடமைகள உண்டு.

● 1)உயர்குருதி அமுக்கத்தினால் ஏனையகுறியீட்டு அங்கங்களில் ஏற்பட்டுள்ள தாக்கங்களைக் கண்டு பிடித்து அதற்குரிய சிகிச்சை அளித்தல்.

● 2) குறிப்பிட்ட நபரிற்கு உயர் குருதி அமுக்கத்திற்கு காரணம் ஏதாவது உண்டா, இல்லையா என்று பரிசோதித்து அறிதல்-

இதற்கு
● சிறுநீர், குருதி பரிசோதனைகள்.
எக்ஸ்ரே பரிசோதனைகள் (X-RAY)
● அல்ட்ராசவுண்ட் (ULTRASOUND)
● சி. ரி. ஸ்கேன் (C.T SCAN) என்ற உபகரணங்கள் பயன் படுத்தப்படும்.

### உயர் குருதி அழக்கத்தை கட்டுப்படுத்தல்

உயர் குருதி அமுக்கத்தை முற்றாகக் குணப்படுத்தல் கடினம் சில நோய்களின் விளைவாகக் காணப்படும் உயர் குருதி அமுக்கத்தை நோயாளிகளின் ஆரம்ப நோயைக் குணப்படுத்துவதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

எனவே உயர் குருதி அமுக்கத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க பின்வரும் வழிமுறைகள் பயன்படுகின்றன.

● உடல்நிறையைக் குறைத்தல்
● மதுபானம் அருந்துதலைத் தவிர்த்தல்
● புகைபிடிக்கும் பழக்கத்தை விட்டு விடுதல்
● உணவில் அதிகப்படியான உப்பு சேர்ப்பதைத் தவிர்த்தல்
● தினமும்தேக அப்பியாசம் செய்தல்
● கொலஸ்திரோல்( (CHOLESTEROL) கூடிய உணவுகளை, (முட்டை. மாமிசம், கொழுப்புப் பண்டம்)குறைத்தல்
● உயர்குருதி அமுக்கத்தைக் குறைக்கும் மருந்துகள் பாவித்தல் பல்வேறு வகைப்பட்ட மருந்து வகைகள்கண்டு பிடிக்கப்பட்டு பாவனையிலுள்ளன. நோயாளிகளுக்கு ஏற்ப பொருத்தமான மருந்துகளை வைத்தியர்கள் ஆரம்பிக்கிறார்கள். தவறாமல் மருந்தை எடுப்பதும், ஒழுங்காக குருதி அமுக்கத்தைச் சோதித்து பார்ப்பதும் நோயாளியின் கடமையாகும். □

## தினசரி தியானம்

### காட்சிக் கெளியான்

காட்சிக் கெளியான் காண்
கண்டாலுங் காணான் காண்
மாட்சி மனம் வைத்தார்க்கு
மாணிக்கத் துள்ளொளிகாண்.

- பட்டினத்தார்

காண்போனும் காணப்படு பொருளும் எல்லாமாய் நீ இருக்க, உன்னைக் காண்பது எப்பொழுது என்று கலக்கப்படுவது எதற்காக?

தெய்வத்தைத்தேடித் திரிவதெல்லாம் பேய்த்தேரைத் தேடுவதற்கு ஒப்பாகும். தென்படுவதெல்லாம் ஒருபொருளின் பல்வேறு தோற்றங்களே, மனதைத் தூயமனதாக மாற்ற வேண்டியதொன்றே நம் கடமை மனது தெளிவடையுமளவு காட்சியும் இனியதாக மாறுகிறது. நல்லமனமுடையவர்க்கு உள்ளும் புறமும் ஒளிர்வது ஒப்பற்ற அந்த ஒருபொருளேயாம்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கரணவாய் வடக்கு எள்ளம் குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துதினங்கள் திருவிழா நடைபெற்று26ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும், 27 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

(செ)

## அமைச்சர்

பேச்சை தாய்லாந்தில் ஆரம்பிக்க முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்குவது குறித்து நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிஸன், பிரதமர் ரணிலைச் சந்தித்துப் பேசி வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ)

மில்க்வைற்
மில்க்வைற் சோப் இண்டஸ்ரியல்ஸ்
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541




ராஜா - யாழ்ப்பாணம்
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
தினசரி 10.30, 2.30, 5.30
(C/3953)

குமார் படுகொலை

## பாலபட்ட பெண்டியின் மகனும் விசாரணை

(கொழும்பு)

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார்பொன்னம்பலத்தின் படுகொலை தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பெண்டியின் மகனும் விசாரிக்கப்பட்டுள்ளார்.

## நோர்வே...

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது வெளிநாடுகள் விதித்துள்ள தடையைப் பாதிக்காதவாறு இலங்கையில் விடுதலைப் புலிகளின் தடையை எவ்வாறு நீக்கலாம் என்பது குறித்தும் நோர்வேயின் உயர் மட்டக்குழுவினருடன் பிரதமர் ரணில் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்தில் விடுதலைப் புலிகளுடன் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு ஏதுவாக விடுதலைப் புலிகளுடைய தடையை எவ்வாறு நீக்கலாம் என்று சட்டமா அதிபர் கமலசபேசனுடன் பிரதமர் ரணில் ஆலோசனை செய்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

புலிகளின் மீதான தடை நீக்கம்பற்றி ஆராய்ந்ததுடன் யூன் மாதம் தாய்லாந்தில் இடம் பெறவுள்ள பேச்சுகளுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிப்பது தொடர்பாகவும் இரு தரப்பினரும் ஆராய்ந்துள்ளனர்.

கடந்த 8ம் திகதி திறந்து வைக்கப்பட்ட ஏ-9 கண்டி வீதியூடான போக்குவரத்தில் உள்ள நடைமுறைச்சிக்கல் தொடர்பாகவும் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதுடன், யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் செயற்பாடுகள், யுத்தநிறுத்த மீறல்கள் தொடர்பாகவும் கருத்துப்பரிமாறப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவிற்கும் நோர்வேயின் உயர் மட்ட குழுவினரிற்கும் இடையே நேற்று நடைபெற்ற சந்திப்பு சுமார் 2 மணித்தியாலங்கள் வரை நீடித்திருந்தது.

எனினும் இச்சந்திப்பின்போது பத்திரிகையாளர் எவரும் அனுமதிக்கப்படவில்லையாயினும் படப்பிடிப்பாளர் மட்டும் அனுமதிக்கப்பட்டனர்.

இதே வேளை நேற்றைய சந்திப்பை அடுத்து 17ம் திகதி நோர்வேயின் உயர் மட்டக் குழுவினர் வன்னிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்கவுள்ளனர்.

18ம் திகதி வியாழக்கிழமை நோர்வேயின் அமைச்சர் மட்டக் குழுவினர் மட்டக்களப்பிற்குச் சென்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் முஸ்லிம் பிரமுகர்கள், அரச அதிபர், கண்காணிப்புக்குழுவினர் ஆகியோரை சந்திக்கவுள்ளனர். (வ)

நினைவு அஞ்சலி



நடராசா பரமேஸ்வரி
வையத்துள்
10-06-1929
காலமே நீதான் எங்கள்
கவலையைப் போக்கிட வேண்டும்
காலனோ கொடியவன்-அவன்
கடமையும் கொடியதாகும்
நாளெல்லாம் அழுது என்ன?
நடப்பதோ விதியின் ஆட்சி
நாமும் அவ்வழியே செல்வோம்
நல்லதை நினைத்துக் கொள்வோம்
வானுறைவு
27-04-2002
இவ்வண்ணம்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
75/1, பலாலி வீதி
கந்தர்மடம்
(C/3964)

HNB JAFFNA BRANCH
ON LINE
WITH HATNANET

இன்று முதல் யாழ்நகரில் முதன்முதலாக முழுமையாகக் கணனி மயப்படுத்தப்பட்ட வங்கிச் சேவையினை ஹற்னா வலையமைப்பினூடாக அறிமுகம் செய்கிறது ஹற்றன் நஷனல் வங்கி.
இன்னும் பல
எங்கிருந்தும் வங்கித்தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் வசதி
- நிலுவை கோரல்
- பணம் வைப்பிலிடல் - நடைமுறைக் கணக்கு/ சேமிப்பு கணக்கு
- பணம் மீளப் பெறுதல்- நடைமுறைத்கணக்கு/ சேமிப்புக் கணக்கு
- வெவ்வேறு கிளைகளில் உள்ள கணக்குகளுக்கு நிதிமாற்றம் செய்தல்
- காசோலைகள் நிறுத்தி வைத்தல்
- கிளைகளிற்கிடையேயான காசோலைகள் பரிமாற்றம்




Anywhere Banking Functions
Balance inquiry
Cash deposits to current Account and savings Account
Cash withdrawals from current Account and Savings Account
Transfer of funds between Accounts maintaied at different branches
Stop payment of cheques issued
Processing of inter Branch Clearing

There's more from HATNANET The largst ON-LINK Banking ser/ice in the country, give customers the advantage of accessing HNB' s services Convently, no matter where Your accounts are
HATNA NET
HATTON NATIONAL BANK
Your Partner in Progress

"இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி"... (லூக்கா 2:10)
இயேசுவே ஆண்டவர்! உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்! இயேசு விடுவிக்கிறார்!

தரிசனம் இலங்கை 2002 - Vision Sri Lanka 2002

வல்லமைப்பெருவிழா
POWER FESTIVAL

சுவிஷேசக் கூட்டமும் தெய்வீக சுகமளிக்கும் ஆராதனைகளும்....
இனிய புதிய பாடல்கள்! விண்ணை முட்டும் ஆராதனை!!
அனல்மூட்டும் தேவசெய்தி!!!
யாவும் இலவசம்!! யாவரும் திரண்டு வாரீர்..
வட்டுக்கோட்டையில் வல்லமைப்பெருவிழா இன்று ஆரம்பமாகின்றது. 16.17.18
வலி மேற்கு பிரதேச சபை மைதானம் சங்கரத்தை
(வட்டு. மத்திய கல்லூரிக்கு முன்பாக)



Rev. Mark Moore (u.s.a)
சங்கை மார்க் மூர்

19 வருடங்களாக 25நாடுகளின் சுவிஷேசம் அறிவித்து பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஜெபித்து சுகம்பெற்றுக்கொடுத்த அற்புத ஊழியர், அனைவருடைய தேவைகளுக்காகவும் அன்னார் அன்புடன் பிரார்த்தனை செய்வார்
19.20.21
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில்



சகோ.சீர்காழி இயேசுப்பிரகாசம் இந்தியாவின் தலைசிறந்த சுவிஷேசப்பாடகர். உலகின் பல பாகங்களிலும் வருடா வருடம்இயேசுவின் இனிய பாடல்களை பாடி வருகிறார். 500க்கு மேலான பாடல்களை இயற்றி 53 ஒலி நாடாக்களை வெளியிட்டவர். காலையிலும் மாலையிலும் தேவபாடல்களை பாடி ஆண்டவரை மகிமைப் படுத்துவார்.

16-17-18 ஏப்ரல் 2002 வட்டுக்கோட்டை கல்லூரி ஒழுங்கை, கானான் ஜெப ஆலயத்தில் (College Lane, Vaddukoddai) காலை 9.00மணிக்கு ஊழியர்கள், முன்னேறும் விசுவாசிகளுக்கான கருத்தரங்கு



வியாதியா! பில்லி சூனிய பிரச்சனையா! வியாபாரத்தில் நஷ்டமா?
குடும்பத்தில் குழப்பமா! சமாதானம் இல்லையா!
சந்தோஷம் இல்லையா! வாருங்கள் விடுதலை பெறுங்கள்!

தொடர்புகளுக்கு: கானான் ஜெப ஆலயம்
இருபாலை, கோப்பாய் ☎: 021-3653

CANAAN FELLOWSHIP INTERNATIONAL
27, Fredrica Road, Colombo-06 Tel: 01-593110, 5853374 Fax: 01-594827

Organized By:
Tamil Christian Fellowship (Switzerland) &
Canaan Fellowship International (Sri Lanka)
(C/3963)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.04.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.